திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு மட்டும் இந்தத் திட்டமா? அல்லது வேறு மாவட்டங்களுக்கும் இப்படிப்பட்ட திட்டங்கள் உண்டா? ஏதாவது அனுப்பியிருக்கின்றூர்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றியது. ஆகவே, செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றிய விவரம் இருக்கிறது. மற்ற மாவட்டங்களைப் பற்றிய கேள்விகள் வரும்பொழுது அதன் விவரங்கள் தரப்படும்.

பென்னலூர்பேட்டை துணைவட்டம்

* 313 வின—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பென்னலூர்ப் பேட்டை துணை வட்டத்தினை வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) வாக்காளர்பட்டியலை திருத்தும் பணி முடியும் வரையிலும் மறுஉத்திரவு பிறப்பிக்கப்படும் வரையிலும் தற்போது உள்ள நிர்வாக அமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது என மத்திய அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. ஆகையால் மற்ற துணை வட்டங்களுடன் இதையும் 1976-77 ஆம் ஆண்டில் படிப்படியாக செயல்படுத்தும் திட்டத்தின் கீழ் அரசு பரிசீலித்து தக்க தருணத்தில் முடிவெடுக்கும்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, டீலிமிடேஷன் கமிஷனின் இந்தப் பணி முடிந்ததும் இது எடுக்கப்படும் என்று கூறினுர்கள். எல்லையோரத்தில் உள்ள இந்த பென்னலூர்ப் பேட்டையை வட்டமாக உயர்த்துவதற்கு முன் உரிமை வழங்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இப்பொழுதே அப்படிப்பட்ட செயற்குறிப்பு இருப்பதாகத்தான் சொன்னேன்.